## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No.5/2022

PW2 சுதா நாள் 07.08.2024

**<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். நான் பாகப்பிரிவினைக்காக வழக்கு போட்டுள்ளேன். என் தாத்தா பெயர் பிச்சைமுத்து. பிச்சைமுத்து பெயரில் உள்ள சொத்துக்களின் வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை . என் தாத்தாவிற்கு பூர்வீகமான எவ்வளவு நிலம் உள்ளது எனக்கு சரியாக தெரியவில்லை. பிச்சைமுத்துவின் மனைவி பெயர் பெரியம்மாள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் முத்துசாமியின் மனைவி பெயரியம்மாள் என்று வம்சாவழிபட்டியல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவ்வாறு செய்திருந்தால் அது தவறு. எதிர்வழக்குரையில் மேற்கூறிய தவறை சுட்டிக்காட்டியும் திருத்தம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். பெரியம்மாள் பெயரில் ஐந்து ஏக்கர் பொட்டல் காட்டில் உள்ளது. ஆற்றுக்கு வடபுறம் 8 ஏக்கர் உள்ளது. ஆற்றுக்கு இன்னொரு பக்கத்தில் கிணற்றுடன் 1/2 காணி நிலம் உள்ளது. பெயரியம்மாள் பெயரில் சொத்து உள்ளது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பெயரிம்மாளுக்கு சொத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. பிச்சைமுத்து இறந்து சுமார் 70 வருடம் இருக்கும் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி அய்யம்பெருமாள் எனக்கு நடுஅப்பா என்றால் சரிதான். அவர் ராணுவத்தில் வேலை செய்தார் என்றால் சரிதான். 1964 ல் பொது குடும்ப சொத்துக்களை அண்ணன் தம்பி பாகமாக பிரித்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கவில்லை என்றால் சொத்துக்கள் பொதுவாக தான் இருக்கும் என்றால் சரிதான். கூட்டாக தான் பட்டாவும் இருக்கும் என்றால் சரிதான். ஏற்கெனவே பாகம் பிரிந்ததால் தான் பட்டா மூன்று பெயர் பெயரிலும் தனித்தனியாக உள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா 30.05.2021 ல் இறந்தார். என் அப்பா உயிருடன் இருக்கும்வரை எந்த பாக வழக்கும் தொடரவில்லை என்றால் சரிதான். ஏற்கெனவே பாகம் பிரிந்ததால் தான் எந்த வழக்கும் என் அப்பா போடவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு பொது குடும்ப சொத்தில் இருந்து 2 ஏக்கர் நிலம் பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த 2 ஏக்கர் நிலத்தில் 62 செண்ட்யை அப்துல் முத்தலிப் என்பவருக்கு என் அப்பா கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சாமிராஜ் என்பவருக்கு 30

செண்ட்யை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்து என் அம்மா சம்பாதித்து என் அப்பா பெயரில் வாங்கப்பட்டது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், அது பூர்வீக சொத்து என்றும் சொன்னால் சரியல்ல. கிரையம் வாங்கியதற்கான கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. பூர்வீக சொத்து என்பதால் தான் கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிச்சைமுத்து பெயரியம்மாளுக்கு அழகம்மாள், பச்சையம்மாள், முத்துசாமி, அய்யம்பெருமாள் , ஆறுமுகம் ஆகியோர் மக்கள் என்றால் சரிதான். அழகம்மாள், பச்சையம்மாள் யை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவருக்கு முன்னாடியே திருமணம் ஆகிவிட்டதால் அவர்களை சேர்க்க தேவையில்லை என்று என்னுடைய வழக்கறிஞர் சொன்னார். நான் தாக்கல் செய்துள்ள 1ம் அயிட்டம் முத்துசாமியின் மனைவி சிந்தாமணிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தற்போது சாட்சி அது பொது சொத்து என்று சொல்கிறார். 1-ம் அயிட்ட சொத்து பொது சொத்து என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2-ம் அயிட்ட சொத்து முத்துசாமிக்கு அரசு ஒப்படைப்பு மூலம் கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல. அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1964 ல் பொது குடும்ப சொத்தில் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது என்றும், அதனால் தான் என் பெயரியப்பா , சித்தப்பா தனிப்பட்ட முறையில் கிரையம் செய்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா கிரையம் செய்தது போக 1 காணி நிலத்தை நான் தான் பயிர் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அதற்கான பட்டாவும் வாரிசு அடிப்படையில் என் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா கிரையம் செய்த 62 செண்ட் மற்றும் 30 செண்ட் யை பொது குடும்ப சொத்தாக காட்டாமல் மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்கு காரணம் ஏற்கெனவே பாகம் பிரிக்கப்பட்டது தான் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் 6 மற்றும் 7 அயிட்ட சொத்துக்கள் இருந்து தற்போது வாரிசு அடிப்படையில் என் பெயருக்கு மாறியுள்ளது என்றால் சரியல்ல. ஆற்றிற்கு வடபுறம் எங்களுக்கும், என் பெரியப்பாவுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ள நிலத்தில் என் அப்பா இருக்கும்போதே இலவச மின்இணைப்பு வாங்கப்பட்டது. அது என் அப்பா பெயரில் வாங்கப்பட்டது. என் பெயரிப்பா பெயரிலும் தனியாக மின்இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல. 8 முதல் 12 அயிட்ட சொத்துக்கள் 1-ம் பிரதிவாதி அய்யம்பெருமாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தனிப்பட்ட முறையில் அய்யம்பெருமாள் வாங்கிய சொத்தையும் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 05.03.1974 ல் சர்வே எண் 223/15 ஏக்கர்

0.18 செண்ட் நிலத்தையும், 10.08.1987 ல் 223/15 A ல் ஏக்கர் 0.93 ல் 24 செண்ட் நிலத்தையும், 12.07.1991 ல் சர்வே எண் 223/15A ல் ஏக்கர் 0.93 ல் 16 செண்ட் நிலத்தையும், 1-ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 15.10.2012 ல் 1-ம் பிரதிவாதி அவருடைய மகன் அசோக் க்கு கிணறு மோட்டார் உள்பட ஹெக்டர் 0.42.0 நிலத்தை தானசெட்டில்மெண்ட்டாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த நிலத்தை அசோக் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி அய்யபெருமாள் அவருடைய மகனுக்கு செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்தது செல்லாது என்று வழக்கு போடவில்லை என்றால் வழக்கறிஞரிடம் சொன்னேன். 12-வது அயிட்ட சொத்தை 1-ம் பிரதிவாதி அவரது மகள் தனலெட்சுமிக்கு தானசெட்டில்மெண்ட்டாக 03.09.2012 ல் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எல்லாம் பொது குடும்ப சொத்து தான். அந்த நிலத்தை அவருடைய மகள் தனலெட்சுமி தான் அனுபவம் செய்கிறார் என்றால் சரிதான். புலஎண் 338/1A2 ல் மீதமுள்ள ஹெக்டர் 1.21.50 நிலத்தினை 1-ம் பிரதிவாதி அவரது பேரனுக்கு தானசெட்டில்மெண்ட் 15.10.2012 ல் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அது பொது சொத்து தான். அந்த சொத்தை அவரது பேரன் தான் அனுபவம் செய்கிறார் என்றால் சரிதான். நாங்கள் எந்த சொத்து பக்கத்திலும் போகவில்லை. 1964 ல் அண்ணன் தம்பிகள் மூன்று பேர்களும் பாகம் பிரிக்கும்போது 1-ம் பிரதிவாதி இதர பாகஸ்தர்களுக்கு ரூ.4000/- பாகத்தை சரிகட்ட கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ஏற்கெனவே பாகம் பிரிந்துள்ளதால் தான் முத்துசாமியும், அவரது வாரிசுகளும் பாக வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி பரமசிவம் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி பரமசிவம் தன் மனைவிக்கு எழுதிக்கொடுத்த போது எனக்கு தெரியாது. பிறகு தெரியும். கிரையம் வாங்கியவர்களையும், எழுதிக் கொடுத்தவர்களையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் வடிவேல் தனியாக பிளாட் வாங்கி வீடு கட்டியுள்ளார். அந்த சொத்தை வழக்கில் சேர்க்கவில்லை. இது நாள் வரை பாகம் பிரிக்காமல் இருந்தால் அந்த சொத்தையும் தாவாவில் காட்டியிருப்போம் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள சொத்தின் விஸ்தீரணமும் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. துர்லாபம், கெட்ட நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வா.சா.1 என்னுடைய பெரிய அண்ணன் . அவர் பெயர் வடிவேல். அவர் கொடுத்துள்ள வாக்குமூலம் சரியானவை தான். நான் கொடுத்துள்ள வாக்குமூலமும் அவர் கொடுத்தது போல தான். இருவரின் வாக்குமூலத்திற்கும் வித்தியாசம் இல்லை. என் அண்ணன் எல்லோருக்கும் சேர்த்து தான் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார் என்றும், நானும் அதே வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளதால் 2-ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டியதில்லை. என் அண்ணன் குறுக்கு விசாரணை செய்தபோது சரியாக தான் பதில் சொல்லியுள்ளார். எனவே 2-ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்யவிரும்பவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

இல்லை.